**செம்பாக்கம் நகராட்சியில் 31.12.2019ம் நாள் செவ்வாய்கிழமை மாலை 5.00 மணியளவில் தனி அலுவலர் அவர்களின் தலைமையில் நடைப்பெற்ற சாதாரணகூட்டத்தின் நடவடிக்கைகளின் நகல்.**

**கலந்துக்கொண்ட தனி அலுவலர் பெயர் மற்றும் பதவி:** **திரு. எஸ். சண்முகம்**
**தனி அலுவலர் / ஆணையாளர்(பொ),**
**செம்பாக்கம் நகராட்சி**

**பொருள் எண்.1**

செம்பாக்கம் நகராட்சி ஆணையர் அவர்களின் டிசம்பர் 2019 மாதத்திய நாட்குறிப்பேட்டினை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** பதிவு செய்யலாம்.

**தீர்மான எண்.588** **பதிவு செய்யப்பட்டது.**

**பொருள் எண்.2**

செம்பாக்கம் நகராட்சி பொது சுகாதார பிரிவு டெங்கு தடுப்பு நடவடிக்கைகள் நகராட்சி பகுதியில் உள்ள 16585 வீடுகள் 927 கடைகள் மற்றும் காலி மனைகள், புதியதாக கட்டுமானங்கள் மேற்கொள்ளும் இடங்கள், நாள்பட்ட மக்கள் பயன்பாடில்லா கட்டிடங்கள், நாள்பட்ட பூட்டிய குடியிருப்புகள், கோயில்கள், மசூதிகள், சர்ச், பார்க்குகள் மற்றும் இதர அரசு மற்றும் அரசு சாரா கட்டிடங்கள், கல்விக்கூடங்கள் இன்னபிற இடங்களில் கொசுப்புழுக்கள் உற்பத்தியாகி டெங்கு, சிக்கன் குன்யா, மலேரியா, யானைக்கால் போன்ற பூச்சிகள் மூலம் பரவும் வியாதிகளை தடுக்கும் விதமாக DBCக்களை கொண்டு பணி மேற்கொள்ள, நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ஒ.மு.எண்.13433/2018/ஜெ1 நாள் 17.9.2018ன் படி, மாவட்ட ஆட்சியர் விலை விகிதத்தில் 55 கொசுப்புழு ஒழிப்பு பணியாளர்களுடன் 10 பேர் Rapid Response Team (RRT) டெங்கு தடுப்பு நடவடிக்கை (டெங்கு காய்ச்சல் கண்ட பகுதிகளில்) விரைவு செயலாக்க குழுவிற்கு 10 பேர் சேர்த்து 65 DBCக்களை (Outsourcing) நியமித்து கொள்ள ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

அதன் அடிப்படையில் ஒப்பந்தப்புள்ளி மூலம் மெஸ்ஸர்ஸ் எஸ்.பி. அன்டு கோ நிறுவனம் மூலம் முதற்கட்டமாக மூன்று மாதங்களுக்கு பணியில் ஈடுபடுத்திக் கொள்ள உத்திரவு வழங்கப்பட்டு அதன் பின்னர் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நிலையில் மேற்படி நிறுவனத்தின் ஒப்பந்த காலம் 14.1.2020ம் தேதியுடன் முடிவடைவதாலும், புதிய ஒப்பந்தப்புள்ளிகள் கோரி தொடர்ந்து செயல்படுத்த காலதாமதம் ஏற்படும் வகையில், அவசர அவசியம் கருதி ஏற்கனவே ஒப்பளிக்கப்பட்ட விலை விகிதத்தில் அதே ஒப்பந்ததாரர் மூலம் 90 நாட்களுக்கு (15.1.2020 முதல் 14.4.2020 வரை) கால நீட்டிப்பு செய்யவும், அதற்கான மூன்று மாத செலவினத் தொகை ரூ.20.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. அவசர அவசியம் கருதி ஏற்கனவே ஒப்பளிக்கப்பட்ட விலை விகிதத்தில் மற்றும் ஒப்பந்ததாரர் மூலம் நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினத் தொகையினை ஏற்க மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்.589** **அலுவலக குறிப்பிற்கு அனுமதி வழங்கப்பட்டது.**

**பொருள் எண்.3**

செம்பாக்கம் நகராட்சிக்கு அலுவலக பயன்பாட்டிற்கு தேவையான கீழ்காணும் கணினி மற்றும் பிரிண்டர்கள் வாங்க GeM (Government eMarket Place)-ல் HP மற்றும் TVS ஆகிய நிறுவனங்களால் தயாரிக்கபடும் தளவாடங்களை அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமான Orange Systems, Chennai - 56 நிறுவனத்திடம் வாங்க ஒப்படைப்பு பொருள் விவரப்பட்டியல் (Proforma Invocie) பெறப்பட்டது.

| Sl.No | Name of the Product | Quantity | Rate | Amount (Incl. of GST) |
|---|---|---|---|---|
| 1 | HP 280 G4 i5 MT Desktop with WiFi & Bluetooth | 3 | 70000 | 210000 |
| 2 | HP Laserjet M1005 Multi function Monochrome laser Printer | 3 | 20000 | 60000 |
| 3 | TVS MSP 250 Star (TVS) Dot Matrix | 2 | 11900 | 23800 |
| | Total | | | 293800 |

HP மற்றும் TVS ஆகிய நிறுவனங்களால் தயாரிக்கப்படும் தளவாடங்களை அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமான Orange Systems, Chennai - 56 என்ற நிறுவனத்திடம் வாங்க ஆகும் செலவினம் ரூ.293800/-க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. HP மற்றும் TVS நிறுவனத்தால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமான Orange Systems, Chennai - 56 என்ற நிறுவனத்திடம் வாங்க மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்.590** **அலுவலக குறிப்பிற்கு அனுமதி வழங்கப்பட்டது.**

**தனி அலுவலர் மற்றும் ஆ ணையாளர்**
**செம்பாக்கம் நகராட்சி**